## ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

1. **நிதிக்கூற்றுக்கள்**

1.1 **அபிப்பிராயம்**

எனது ஆய்வுகளின் மூலம் தெரிய வந்தவை மற்றும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் விளக்கங்களுக்கமைய, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருக்கின்றது எனவும் இவ்வறிக்கையில் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருந்த தாக்கங்களை தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் நிதி நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் விளைவுகளையும், காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

1.2 **நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

1.2.1 **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

கணக்காய்வின் போது பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 திசெம்பர் 31 ஆம் திகதியில் மருத்துவ நிலையத்தில் எஞ்சியிருந்த ரூபா 538,486 பெறமதியான மருந்து இருப்புக்களை ஐந்தொகையில் சொத்தொன்றாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2001 – 2010 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 59,550 பெறுமதியான 100 பந்துகளை ஐந்தொகையில் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(இ) விஞ்ஞான ஆய்வுகூடம் மற்றும் கற்பித்தல் உபகரணக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ள 2008 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 173,400 பெறுமதியான பல்ஊடக உபகரணமொன்று 2009 ஆம் ஆண்டின் போது காணாமல் போயிருந்ததுடன், அதன் பெறுமதியை 2010 பெப்ரவரி மாதம் தனியார் பாதுகாப்பு சேவைக்கு செலுத்த வேண்டிய பட்டியலில் இருந்து கழித்து செலுத்தப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2006, 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியிருந்த மாணவர்களிடமிருந்து 2010 திசெம்பர் 31 உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய விடுதிக் கட்டணம் ரூபா 597,500 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) 2001 பெப்ரவரி 28 ஆம் திகதி நடைபெற்ற 2010 ஆம் ஆண்டின் பொருட் கணிப்பீட்டு சபை அறிக்கையின் பிரகாரம் இருப்புக்களின் மிகை மற்றும் பற்றாக்குறை என்பவற்றின் பெறுமதியான முறையே ரூபா 26,740 உம் 12,199 உமான தொகை நாட்குறிப்புப் பதிவினூடாக சரியாக இருப்புக் கணக்கிற்கு சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் செலவினத்திற்காக பதவியணியின் 3 பேருக்கு வழங்கப்பட்ட ரூபா 36,698 ஆன முற்பணம் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் தீர்வு செய்யப்படாததன் காரணமாக மீளாய்வாண்டின் செலவினம் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2.2 **கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

ஒவ்வொரு விடயத்திற்கும் முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகள் இன்மையால் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள பின்வரும் விடயங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| காணிக் கையேற்பு | 17,295,907 | உரித்துச் சான்றிதழ் |
| அலுவலக உபகரணங்கள் | 2,474,143 | பெறுமதியை உறுதிப்படுத்துவதற்காக பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் |
| கணனி இயந்திரங்கள் | 23,281,635 | |
| விளையாட்டு பொருட்கள் | 1,532,828 | |
| நூலகப் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் | 32,590,936 | |
| மீளச்செலுத்த வேண்டிய வைப்புக்கள் | 1,381,220 | வைப்புப் பதிவேடு/ பட்டோலைகள் |
| அட்டுறு செலவினம் | 5,900,300 | பயன்படுத்தும் பதிவேடுகள்/விபரமான பட்டோலைகள் |

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கீழே காண்பிக்கப்பட்டுள்ள இணங்காமை சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | விபரங்கள் |
|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் 14(1) ஆம் பிரிவு | வரைவு ஆண்டறிக்கையின் பிரதியொன்றை நிதிக்கூற்றுடன் கணக்காய்வார் தலைமை அதிபதி அவர்களுக்கு சமர்ப்பித்திருக்க வில்லை. |
| (ஆ) | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக் கழகங்கள் அதிகாரச் சட்டம் | |
| | (i) 109 ஆம் பிரிவு | பல்கலைக்கழகத்தின் 2009 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை வர்த்தமானிப் பத்திரத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 110 ஆம் பிரிவு | பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | 1985 இன் 01 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1958 இன் 15 இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் 10 ஆம் பிரிவு | 2006 - 2010 காலப்பகுதியினுள் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட செயற்பாட்டு உதவியாளர்களுக்கான ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புத் தொகையான ரூபா 2,458,130 செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | 2006 - 2010 காலப்பகுதியினுள் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட செயற்பாட்டு உதவியாளர்களுக்கான ஊழியர் பங்களிப்பு நிதியப் பங்களிப்புத் தொகையான ரூபா 368,719 செலுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (உ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினதும் உயர் கல்வி நிறுவனங்களுக்கும் உரிய தாபன விதிக்கோவை XXIV ஆம் அத்தியாயத்தின் 1 ஆம் பிரிவு | மீளாய்வாண்டில் குறித்துரைக்கப்பட்ட கால இடைவெளிகளில் களஞ்சிய மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 1980 இன் பெப்ரவரி 13 ஆம் திகதிய 63 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் 6.3 ஆம் பிரிவு | மதிப்பீடு செய்யப்பட்ட செலவினங்களினதும் வருமானங்களினதும் உள்ளவாறான எண்ணிக்கைகளுக்கிடையான வித்தியாசம் தொடர்பான அறிக்கையொன்றினை நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (எ) | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐ/ஏ/ஐ/2002/1 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனிகள், கணனி உதிரிப்பாகங்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | பொது நிர்வாகச் சுற்றறிக்கை | |
| | (i) 1994 ஒக்டோபர் 21 ஆம் திகதிய 37/94 ஆம் இலக்க சுற்றறிக்கை | அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது செயற்திட்ட தொழிற்பாட்டு முகாமையாளர் பதவிக்காக 70 வயதுக்கு மேற்பட்ட ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவரை பணிப்பொறுப்பு அடிப்படையில் 2005 திசெம்பர் 31 ஆம் திகதி முதல் 06 மாதங்களுக்காக ஆட்சேர்க்கப்பட்டு இதுவரை மூன்று மாதங்கள் வீதம் அவரது சேவைக்காலம் நீடிக்கப்பட்டிருந்தது. |
| | (ii) 2008 யூலை 30 ஆம் திகதிய 21/2006(iv) ஆம் திகதிய சுற்றறிக்கை | 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டு இது வரை பல்கலைக்கழகத்தில் சேவைபுரியும் 17 தொழிற்பாட்டு உதவியாளர்களின் சேவையை நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஐ) நிதிப்பிரமாணம்

------------------------

| | |
|---|---|
| (i) 104 | காணாமற் போன சொத்துக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 110 | நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான ஏடொன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை |
| (iii) 756 | நூலகப் புத்தகங்கள் மற்றும் எஞ்சிய மருந்துப் பொருட்கள் தொடர்பாக வருடாந்த கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளினால் நிதிசார் விளைவு மீண்டெழும் செலவினத்திற்காக கிடைக்கப்பெற்ற ரூபா 152,800,000, அரசாங்க மானியத்தைக் கணக்கிற்கு எடுத்த பின்னர் ரூபா 2,450,399 மிகையாக இருந்ததுடன், அதற்கு எதிரான முன்னைய ஆண்டிற்கு கிடைக்கப்பெற்ற ரூபா 108,870,000 ஆன மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கிற்கு எடுத்த பின்னர் ரூபா 10,441,719 பற்றாக்குறையாக இருந்ததால் நிதிசார் விளைவில் தொடர்ந்தும் ரூபா 12,892,118 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டதுடன், மீண்டுவரும் மானியம், சுயமாக நிதி நிகழ்ச்சித்திட்ட வருமானம் மற்றும் ஏனைய வருமானங்களின் அதிகரிப்பு என்பன இவ் அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

### 2.2 செயலாற்றல் மீளாய்வு

#### 2.2.1 கல்விசார் செயலாற்றல்

----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2010 ஆம் ஆண்டிற்கு மாணவர்கள் 45 பேர் அதாவது 8.5% குறைத்து சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஆ) 2006 முதல் 2010 ஆம் ஆண்டு வரை பல்கலைக்கழகத்திற்கு சேர்க்கப்பட்டிருந்த 68 மாணவர்கள் கற்கை நெறிகளை விட்டுச் சென்றிருந்தனர்.

(இ) மீளாய்வாண்டினுள் நடாத்தப்பட்ட இறுதி ஆண்டு பரீட்சைக்காக தோற்றிய 151 பேரில் 148 பேர் சித்தியடைந்து 3 பேர் குறை சித்தியடைந்திருந்தனர்.

### 2.2.2 ஒரு மாணவனுக்கான செலவினம்

2006-2010 ஆம் ஆண்டுகளுக்காக பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் மொத்த மீண்டுவரும் செலவினம் என்பவற்றின் பிரகாரம் கணக்கிடப்பட்ட ஒரு மாணவருக்கான சராசரி செலவினம் தொடர்பான விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| ஆண்டு | பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | மொத்த மீண்டெழும் செலவினம் | ஒரு மாணவனின் செலவினம் |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| 2006 | 167 | 39,282,684 | 235,226 |
| 2007 | 370 | 74,375,733 | 201,015 |
| 2008 | 741 | 118,634,901 | 160,101 |
| 2009 | 1,257 | 152,982,159 | 121,704 |
| 2010 | 1,715 | 200,874,819 | 117,128 |

மீண்டுவரும் செலவினத்திற்கு ஒப்பாக மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்தமையால் ஒரு மாணவருக்கான செலவினம் படிப்படியாக குறைவடைந்திருந்தது.

2.2.3 **முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) கணனி முறைமை**

(i) பல்கலைக்கழகத்தின் வழமையான நிர்வாகத்திற்காக கணனி முறைமையொன்றை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 3,680,000 உடன்படிக்கைத் தொகைக்கு 2006 ஆம் ஆண்டில் ஓர் தனியார் கம்பனியுடன் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டு அக்கம்பனிக்கு உடன்படிக்கை தொகையில் 20% ஆன ரூபா 736,000 முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் கணனி முறைமையொன்று வழங்கப்பட்டிராததுடன், ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 368,000 செயலாற்றல் பிணையின் செல்லுபடிக்காலம் 2007 பெப்ரவரி 20 ஆம் திகதியுடன் முடிவடைந்திருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் கணனி முறைமையொன்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக பல்கலைக்கழகத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை இதுவரை அறவிடுவதற்காக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மாணவர்களின் கணனி கல்வி நடவடிக்கைகளுக்காக வாடகை அடிப்படையில் 110 கணனிகளை வழங்குவதற்காக 2007 முதல் 2010 வரையான 04 ஆண்டுகளில் ரூபா 22,870,727 தொகை தனியார் நிறுவனமொன்றிற்குச் செலுத்தப்பட்டிருந்தது. சந்தையில் விலை விபரங்களைக் கருத்திற்கொள்கையில் முன்னைய ஆண்டுகளில் கணனிகளை வாடகைக்கு எடுப்பதற்காக செலுத்திய பணத்தில் புதிய மாதிரியிலான 280 கணனிகளை கொள்வனவு செய்யக்கூடிய நிலையில் பல்கலைக்கழகம் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) விடுதி வசதிகள்**

(i) பல்கலைக்கழகத்தினால் பதவியணியின் 59 பேருக்கு விடுதிவசதிகளை வழங்குவதற்காக மாதாந்த வாடகைக் கொடுப்பனவு அடிப்படையில் 38 வீடுகள் குத்தகைக்கு எடுக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக 2010 ஆம் ஆண்டில் வீட்டு உரிமையாளர்களுக்கு வாடகையாக ரூபா 3,654,496 செலுத்தப்பட்டிருந்தது. ஆயினும், வதிவிட பதவியணியிடமிருந்து வாடகையாக ரூபா 521,792 மட்டுமே அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வதிவிட வீடுகளுக்கு வாடகை செலுத்துவதற்கு பல்கலைக்கழகத்திற்கு வருடாந்தம் ரூபா 3,132,704 அளவிலான மேலதிக செலவினமொன்றை ஏற்க நேர்ந்திருந்தது.

(ii) பல்கலைக்கழகத்தினால் தனியாள் வீடுகளுக்காக குத்தகையை செலுத்தப்படுவதற்கு மேலதிகமாக மின்சார மற்றும் நீர்ப்பட்டியல்களும் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அவ்வீடுகளில் தங்கியிருந்த பதவியணியினரிடம் இருந்து எவ்வித வாடகையோ அல்லது கட்டணமோ அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 சொத்து முகாமைத்துவம்

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தேவைப்பாட்டை கருத்திற்கொள்ளாது 2006, 2007 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளுக்காக மாணவர் கைநூல்களை அச்சிட்டதன் காரணமாக ரூபா 172,825 கிரயமான 557 கைநூல்கள் எஞ்சியிருந்தன.

(ஆ) 2010 யூன் 29 ஆம் திகதிய உள்ளக கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம் ரூபா 76,422 பெறுமதியான 145 நூலகப் புத்தகங்கள் காணாமற் போயிருந்தன.

(இ) மருத்துவ நிலையங்களில் 29 வகையான மருந்துப் பொருள் இருப்புக்கள் காலாவதியாகியிருந்தது.

(ஈ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேவைப்பாட்டிற்கு மேலதிகமாக 76 கட்டில்களும் 198 மெத்தைகளும் கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியத்திலும் "F"தொகுதி கட்டிடத்திலும் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(உ) 2010 யூன் 30 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 322,560 பெறுமதியான 5 தீ பாதுகாப்பு பெட்டகங்களை இதுவரை பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது கஞ்சியத்தில் காணப்பட்டன.

### 2.2.5 மனித வள முகாமைத்துவம்

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2006 ஆம் ஆண்டு முதல் இதுவரை பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் பதவியணியில் 07 பேராசிரியர் பதவிகளுக்கும் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I இன் 3 பதவிகளுக்காகவும் ஆட்சேர்ப்பு இடம்பெற்றிருக்கவில்லை. 2010 திசெம்பர் 31 இல் அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் பதவியணியின் 129 பதவிகளில் 32 வெற்றிடமாகக் காணப்பட்டன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட கல்விசாரா பதவியணியின் 82 பதவிகளில் 58 வெற்றிடமாகக் காணப்பட்டது.

(இ) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரம் இல்லாமல் 2006 நவம்பர் மாதத்திலிருந்து இதுவரை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தின் பதில் கற்நெறிப் பணிப்பாளராக உத்தியோகத்தர் ஒருவர் ஆட்சேர்க்கப்பட்டு ரூபா 378,000 கொடுப்பனவொன்றுடன் ரூபா 154,419 போக்குவரத்துப் படியும் மீளாய்வாண்டில் 37 நாட்கள் சேவை புரிந்தமைக்காக வழங்கப்பட்டிருந்தன.

### 2.2.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையில் கருத்திற் கொள்ளக்கூடியளவு வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருந்தாக தெரியவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(i) கணக்கீடு

(ii) பாதீடு

(iii) நிலையான சொத்துக்கள்

(iv) களஞ்சியம்